
# பாதிக்கப்பட்ட –
# வர்கள் மற்றும்
# சாட்சிகளின்
# பாதுகாப்பு







## குற்றமொன்றினால் பாதிக்கப்பட்ட-வர்கள் அல்லது சாட்சிகளாகிய உங்களுக்கு சட்டத்தில் ஏதேனும் பாதுகாப்பு உள்ளதா?

ஆம். 2015 இல் இயற்றப்பட்ட 2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, “குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப் பட்டோருக்கும் சாட்சிகளுக்-குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம்” ஆனது நீதி நிர்வாகத்தின் பலத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டு குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குற்றங்களு-க்கான சாட்சிகளுக்குரிய பாதுகாப்பினை அளிக்கின்றது.

# பாதிக்கப்பட்டவர்



அரசியலமைப்பின் உறுப்புரை 13 ஆனது தனது உப பிரிவுகளான (1) அல்லது (2) இல் பின்வருமாறு கூறுகின்றது:

(1) எந்தவொரு நபரும் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடபடிமுறையொன்றிற்கு அமைவாக மாத்திரமே கைது செய்யப்பட முடியும் என்பதுடன் கைது செய்யப்பட்டதற்கான காரணம் குறித்து கைது செய்யப்படுகின்ற நபருக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

(2) கட்டுக்காவலில் வைத்திருக்கப்படும், தடுத்துவைத்திருக்கப்படும், அல்லது வேறு வகையில் சொந்தச் சுதந்திரம் பறிக்கப்பட்டிருக்கும் எந்தவொரு நபரும், சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கிணங்க நீதிபதி முன்னர் கொண்டு வரப்படுதல் வேண்டும் (மிக அண்மையிலுள்ள தகுதி வாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதி) என்பதுடன், சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடபடிமுறைக்கிணங்க அத்தகைய நீதிபதியினால் வழங்கப்படும் கட்டளை படியன்றி தொடர்ந்தும் கட்டுக்காவலில் வைத்திருக்கப்படுதலோ, தடுத்து வைக்கப்படுதலோ அல்லது சொந்தச் சுதந்திரம் பறிக்கப்படுதலோ ஆகாது.

<u>பாதிக்கப்பட்டவர் என்பவர் யார்?</u>




- ஏதேனுமொரு சட்டத்தின் கீழ் காணப்படும் குற்றமொன்றின் அல்லது
- அரசியலமைப்பின் உறுப்புரை 13(1) அல்லது (2) இன் கீழ் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளின் மீறுதலின்

விளைவான ஏதேனும் செயல் அல்லது செய்யாமையினால் பின்வருவனவற்றுள் எவற்றையேனும் ஒன்றை அனுபவிக்கும் எவரேனும் ஒரு நபர் (சிறுவர் உள்ளடங்கலாக) பாதிக்கப்பட்டவர் எனப்படுவார்:

- காயம்
- ஊறு
- குறைபாடு அல்லது ஊனம் (உடல் ரீதியானது அல்லது உள ரீதியானது)
- உணர்வு ரீதியான தீங்கு
- பொருளாதார அல்லது வேறு நட்டம்

மேலும் பாதிக்கப்பட்டவர் என்ற வரையறைக்குள் கீழ்வருவோரும் உள்ளடக்கப்படுவார்கள்:

- இன்னுமொரு பாதிக்கப்பட்டவருக்கு உதவியளிப்பதற்காக அல்லது
- ஏதேனும் குற்றமொன்று புரியப்படுவதைத் தடுப்பதற்காக



## பாதிக்கப்பட்டவருக்கு காணப்படுகின்ற உரிமைகள் யாவை?

- சமத்துவம், நீதியான தன்மை மற்றும் மரியாதையுடன் நடத்தப்படுவதற்கான உரிமை
- விரைவான நிவாரணத்தைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை
- கிடைக்கக்கூடிய சட்ட நிவாரணங்கள், விசாரணையின் முன்னேற்றம், மருத்துவ மற்றும் சமூக சேவைகள் மற்றும் வேறு ஏதேனும் உதவி பற்றி அறிவிக்கப்படுவதற்கான உரிமை
- முறைப்பாடொன்றை முன்வைப்பதற்கான மற்றும் அதனை எவரேனும் பொலிஸ் அதிகாரியினூடாகப் பதிவு செய்து கொள்வதற்கான உரிமை மற்றும் சட்டத்தரணியொருவரினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதற்கான உரிமை
- தண்டனை தீர்மானிக்கப்படுவதற்கு முன்னர், மேன்முறையீட்டின் போது அல்லது தண்டிக்கப்பட்ட நபருக்கு மன்னிப்பு வழங்குதல் குறித்து கவனத்தில் கொள்ளப்படும் பட்சத்தில், இழைக்கப்பட்ட குற்றமானது எவ்வாறு உங்களுடைய வாழ்வில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பது குறித்து நீங்கள் சமர்ப்பிப்பொன்றினைச் செய்ய இயலும்



# சாட்சி


சாட்சியொருவர் குற்றமொன்று புரியப்பட்டமை அல்லது அடிப்படை உரிமையொன்றின் மீறுகை அல்லது மனித உரிமையொன்றின் மீறல் பற்றி எவரேனும் சட்ட வலுவுறுத்தல் அதிகாரிக்குத் தகவல் வழங்கியுள்ளதன் விளைவாக அல்லது முறைப்பாடொன்றைச் செய்துள்ளதன் விளைவாக அல்லது கூற்றொன்றை அளித்துள்ளதன் விளைவாக அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது ஓர் ஆணைக்குழுவுக்கு முன்னர் ஏதேனும் சாட்சியத்தை வழங்கியதன் விளைவாக அல்லது சட்ட வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்ததன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதேனும் உண்மையான அல்லது சாத்தியமான தீங்கு, அச்சுறுத்தல், மிரட்டுதல், பழிவாங்குதல் அல்லது எதிர்த்தாக்குதல் என்பவற்றுக்கெதிரான பாதுகாப்புக்கு உரித்துடையவராவார்.

சாட்சி என்பவர் யார்?

சாட்சி என்பவர்:

- சார்த்துரைக்கப்பட்ட குற்றமொன்று புரியப்பட்டுள்ளமை அல்லது அடிப்படை உரிமையொன்று மீறப்பட்டுள்ளமை அல்லது மனித உரிமையொன்று மீறப்பட்டுள்ளமை தொடர்பில் புலன்விசாரணையொன்று அல்லது விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளபோது அல்லது ஆரம்பிக்கப்படும் சாத்தியகூறு காணப்படுகின்றபோது, எவரேனுமொரு சட்ட அமுலாக்க அதிகாரியிடம் அவ்விசாரணைக்கு அடிப்படையான தகவலை வழங்கிய அல்லது முறைப்பாட்டினைப் பதிவு செய்த நபர்
- சட்ட அமுலாக்க அதிகாரியினால் புலன்விசாரணையொன்று அல்லது விசாரணையொன்று நடத்தப்படுகின்ற காலப்பகுதியில் தகவல்களை வழங்கிய நபர் அல்லது கூற்றொன்றைச் சமர்ப்பித்துள்ள நபர்
- செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டிற்கு ஆதரவாக அல்லது பாதிக்கப்பட்டவரினால் முன்னெடுக்கப்பட்டுள்ள ஏதேனும் சட்ட நடவடிக்கையொன்றுக்கு ஆதரவாக சத்தியக் கடதாசியொன்றை வழங்கியுள்ள நபர் அல்லது கூற்றொன்றைச் சமர்ப்பித்துள்ள நபர்
- ஆணைக்குழுவிற்கு ஏதேனும் தகவலை அல்லது தொடர்பாடலை வழங்கியுள்ள நபர்
- ஏதேனும் நீதிமுறை அல்லது நீதிமருவிய வழக்கு நடவடிக்கையில் கூற்றொன்றைச் செய்யுமாறு, சாட்சியமளிக்குமாறு அல்லது ஏதேனும் ஆவணம், அறிக்கை அல்லது பொருளொன்றைச் சமர்ப்பிக்குமாறு கோரி நீதிமன்றத்தினால் அல்லது ஆணைக்குழுவினால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ள நபர் அல்லது அத்தகையதொரு அழைப்பாணை விடுக்கப்படுமென நம்புவதற்குரிய நியாயமான காரணங்களைக் கொண்டுள்ள நபர்
- சார்த்துரைக்கப்பட்ட குற்றமொன்று புரியப்பட்டுள்ளமை அல்லது அடிப்படை உரிமையொன்று மீறப்பட்டுள்ளமை அல்லது மனித உரிமையொன்று மீறப்பட்டுள்ளமை தொடர்பில் விசாரணை செய்துள்ள பகிரங்க அலுவலரொருவர்

மேலும் சாட்சி என்ற வரையறைக்குள் கீழ்வருவோரும் உள்ளடக்கப்படுவார்கள்:




<u>சாட்சிகளுக்கு காணப்படுகின்ற உரிமைகள் யாவை?</u>

சாட்சியொருவர், புலனாய்வாளர்கள், நீதி மருவிய மற்றும் நீதிமுறை அதிகாரிகளிடமிருந்து நியாயமான மற்றும் மரியாதையுடனான நடாத்-துகையைப் பெறுவதற்கு உரித்துடையவராவார் என்பதுடன் அவர்க-ளினால் தொல்லைக்குட்படுத்தப்படவோ, மிரட்டப்படவோ, வலுக்கட்ட-ாயப்படுத்தப்படவோ அல்லது முரணாக நடத்தப்படவோ கூடாது.



நீங்கள் அறிவீர்களா?

- இழைக்கப்பட்ட குற்றத்தினால் மற்றும் அது தொடர்பான நீதி-முறை நடபடிமுறைகளில் பாதிக்கப்பட்டவர் பங்குபற்றியமையி-னால், அவருக்கு ஏற்பட்ட ஏதேனும் செலவீனங்களுக்கான பணத்தினை பாதிக்கப்பட்டவர் அதிகார சபையிடமிருந்து கோர இயலும்
- போதுமான வளங்கள் அரசிடம் இருக்குமிடத்து, பாதிக்கப்பட்ட-வர்கள் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட உடல் ரீதியான அல்லது உள ரீதியான ஊறிற்கான தேவைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் மருத்துவ சிகிச்சையினை கோரிப் பெற்றுக்கொள்ள இயலும்




குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபையானது (அதிகாரசபை என அறியப்படுவது) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரையும், சாட்சிகளையும் பாதுகாப்பதற்காகத் தாபிக்கப்பட்டதாகும்.

- அதிகார சபையின் முகாமைச் சபையானது ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்ற 5 உறுப்பினர்களைக் கொண்டமைதல் வேண்டும். அத்தகைய உறுப்பினர்கள்:
  - குற்றவியல்சார்ந்த
  - குற்றவியல் நீதி முறை சார்ந்த
  - மனித உரிமைகளின் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு சார்ந்த, அல்லது
  - மருத்துவம் சார்ந்த துறைகளில்

கல்விசார் அல்லது தொழிற்சார் தகுதியினை உடையவர்களாகவும் அனுபவமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

- அத்துடன் 7 பதவி வழி உறுப்பினர்களும் முகாமைச் சபையில் உள்ளடக்கப்படுவார்கள்:
  - நீதி, பொலிஸ் திணைக்களம், பெண்கள் விவகாரம், சிறுவர்கள் விவகாரம் ஆகியவற்றுக்கு பொறுப்பான அமைச்சுக்களின் செயலாளர்கள்
  - இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர்
  - சட்டமா அதிபரினால் பெயர் குறிக்கப்படுமொருவர்
  - மற்றும் பொலிஸ்மா அதிபரினால் பெயர் குறிக்கப்படுமொருவர் ஆகியோர் உள்ளடங்கலாக

“பிரிவு” என்றால் என்ன?

- குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளிற்குமான உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவானது (“பிரிவு” என அறியப்படுவது) அதிகார சபையின் வழிநடத்தல் மற்றும் வழிகாட்டலின் கீழ் இயங்குகின்றது
- சிரேஷ்ட பொலிஸ் கண்காணிப்பாளர் ஒருவர் பிரிவிற்குப் பொறுப்பானவராக காணப்படுவார்

**பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சி பாதுகாப்புக்கான கோரிக்கையினை யாரிடம் முன்வைக்க வேண்டும்?**

- குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபை
- குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளிற்குமான உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவு
- நீதிமன்றங்கள்
- குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள பொலிஸ் நிலையத்தின் நிலைய பொறுப்பதிகாரி
- பின்வரும் ஆணைக்குழுக்கள்
  - இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
  - இலஞ்ச மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு
  - விசாரணை ஆணைக்குழுக்கள் அல்லது ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் விசேட விசாரணை ஆணைக்குழுக்கள்
  - விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்படுகின்ற வேறு ஏதேனும் ஆணைக்குழுக்கள்

**எவ்வாறு பாதிக்கப்பட்டவரொருவர் “குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் உதவியும் பாதுகாப்பும் அளிக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்குள்” அனுமதிக்கப்படுவார்?**

குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சியின் வேண்டுகோளின் அடிப்படையில்

அதிகாரசபையினால் செய்யப்படுகின்ற சிபாரிசின் அடிப்படையில்

ஏதேனுமொரு சட்ட அமுலாக்க அதிகார சபையினால் அல்லது ஒரு பகிரங்க அலுவலரினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கையின் அடிப்படையில்

நீதிமன்றம் அல்லது ஆணைக்குழுவொன்றிடமிருந்து பெற்றுக்கொள்கின்ற அறிவித்தலின் அடிப்படையில்.

- அச்சுறுத்தல் பற்றிய கணிப்பீடொன்று நடத்தப்பட்டதன் பின்னரும் சம்பந்தப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் சம்மதம் பெறப்பட்டதன் பின்னருமே குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு அல்லது சாட்சியொருவருக்கு உதவியும் பாதுகாப்பும் வழங்கப்படும்
- குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் உதவியும் பாதுகாப்பும் அளிக்கும் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னர் பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சி, பிரிவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்ளுமாறு தேவைப்படுத்தப்படலாம்

பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சியொருவர் முன்கூட்டிய பாதுகாப்பினைப் பெற்றுக்கொள்ள இயலுமா?

ஆம். குற்றமொன்றிற்கு பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சியொருவர்

- குற்றமொன்று அல்லது அடிப்படை உரிமையொன்றின் மீறல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் ஏதேனும் புலனாய்வில் அல்லது விசாரணையில் தமது பங்கேற்பின் காரணமாக் அல்லது
- ஏதேனும் நீதிமுறை நடவடிக்கையில் பங்கேற்க எண்ணியுள்ளமையின் காரணமாக

தமக்கு ஏதேனும் ஊறு விளைவிக்கப்படும் என நம்புவதற்கு நியாயமான ஏதுவைக் கொண்டுள்ள சந்தர்ப்பத்தில், அத்தகைய உண்மையான அல்லது எதிர்பார்க்கப்படுகின்ற ஊறிலிருந்து பாதுகாப்புக் கோருவதற்கு இயலும்

நீங்கள் எவ்வகையான பாதுகாப்புகளை கோர முடியும்?

கிடைக்கக்கூடிய வளங்கள், பாதுகாப்பிற்கான தேவை மற்றும் பொருத்தமான சட்டங்களுக்கு அமைவாக பாதுகாப்பு பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- குறிப்பிட்ட நபர் மற்றும் ஆதனத்திற்கான பாதுகாப்பு
- தற்காலிக தங்குமிட வசதி
- பாதிக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் சம்மதத்தத்துடன் நிரந்தர மீளமர்த்-துகை
- தற்காலிக அல்லது நிரந்தரத் தொழில்
- மீள அடையாளம் காணல்
- வேறு ஏதேனும் வழிமுறை.

யார் பாதுகாப்பை நிறுத்தலாம்?


அதிகார சபை


பிரிவிற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் கண்காணிப்பாளர்


ஏதேனும் ஆணைக்குழு

<u>எவ் அடிப்படைகளில் பாதுகாப்பு நிறுத்தப்படலாம்?</u>

- பாதுகாப்பிற்கானத் தேவை தொடர்ந்தும் நிலைத்திருக்காதபோது
- பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சி-
  - பாதுகாப்பு முடிவுறுத்தப்படுதல் வேண்டுமென வேண்டுகோள் விடுக்குமிடத்து
  - வழங்கப்பட்ட அத்தகைய பாதுகாப்பைப் பெற மறுக்குமிடத்து
  - வழங்கப்பட்ட பாதுகாப்பைத் துஷ்பிரயோகம் செய்யுமிடத்து
  - ஏதேனும் சமாதானக் குலைவினை ஏற்படுத்தும் செயலொன்றைப் புரியுமிடத்து அல்லது மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கக்கூடிய குற்றமொன்றைப் புரியுமிடத்து
  - செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நியதிகளுக்கு முரணாக செயற்படுமிடத்து
  - ஏதேனும் பொய்யான தகவலை வழங்கியுள்ளதாக அறியப்படுமிடத்து

<u>பாதுகாப்பினைப் பெற்றுக்கொள்கின்ற பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சியின் கடமைகள் யாவை?</u>

- பாதுகாப்பைத் துஷ்பிரயோகம் செய்ய கூடாது
- பொய்யான தகவல்களை வழங்க கூடாது
- புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நியதிகளுக்கு முரணாக செயற்பட கூடாது

# நஷ்டஈடு




<u>நீங்கள் எப்போது அதிகாரசபையிடம் நஷ்டஈட்டிற்காக விண்ணப்பிக்க இயலும்?</u>

- ஏதேனும் உடல்ரீதியான அல்லது உளரீதியான ஊறிற்காக அல்லது ஆதனத்திற்கு ஏற்பட்ட ஏதேனும் இழப்பு அல்லது சேதத்திற்காக
- மருத்துவ சிகிச்சை, புனர்வாழ்வு அல்லது ஆலோசனை சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக

நீதிமன்றமானது சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள தண்டனைகளுக்கு மேலதிகமாக, பாதிக்கப்பட்டவருக்கு நஷ்டஈடு செலுத்துமாறு குற்றமொன்றிற்காக தண்டிக்கப்பட்டுள்ள நபருக்கு கட்டளையிடலாம்.

## பயனுள்ள தொடர்புகள்

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபை

இல. 428/11A, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல
தொலைபேசி: 011 287 9540

நீதி அமைச்சு

உயர் நீதிமன்றத் தொகுதி, அதிகரன மாவத்தை, கொழும்பு 12 01000
தொலைபேசி: 0112 323 022

இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசே'க ஐக்கியம் (NCEASL)

இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியம் ஆனது சுவிசேஷக கிறிஸ்தவர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரு அமைப்பாக, இலங்கையிலுள்ள சிறுபான்மையினரின் மதச்சுதந்திரத்தினை பாதுகாக்கின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

முகவரி: P.O. Box இல. 113, தெஹிவளை, இலங்கை
தொலைபேசி : 011 551 1358
மின்னஞ்சல்: legal@nceasl.org
வலைத்தளம்: www.nceasl.org

© The Religious Liberty Commission of the NCEASL. All rights reserved.